ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 04 ·September 2026
[https://www.tamilmanam.in]

| Manuscript ID | TMN-12-04-2026-01 | Article type | Original Research Article |
|---|---|---|---|
| Received | 10 September 2026 | Revised | 12 September 2026 |
| Accepted | 19 September 2026 | Published online | 19 September 2026 |
| Volume / Issue | Vol. 12, Issue 04 | Pages | 492-501 |
| DOI | https://doi.org/10.63300/tm12042026 | | |

[ORIGINAL RESEARCH ARTICLE]

# சு. காந்தி துரை சிறுகதைகளில் மனிதநேயம்

## Humanism in the Short Stories of Su. Kanthi Durai

**மு. சுமதி[1]*, முனைவர் மு. கலாமாரி[2]**

*[1] முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம் - 627802, தமிழ்நாடு, இந்தியா*

*[2] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வு மையம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம் - 627802, தமிழ்நாடு, இந்தியா*

***Corresponding author:** மு. சுமதி, Reg. No. 23211244022004, Email: sumathialan1984@gmail.com*

***ORCID iD:** Author 1: https://orcid.org/0009-0000-9826-9646; Author 2: https://orcid.org/0000-0002-2879-4151*

## Abstract

Humanity originates from the natural and fundamental quality of humanness. Tamil traditional works such as Thirukkural, Tholkappiyam, and Siddhar poems testify that the defining characteristic of humanity is acting without any expectations when helping others. In the 21st century, as humanistic values fade amid a mechanized lifestyle, modern Tamil short stories engage in an effort to reclaim those traits. Based on the short stories "Thunikkara Sami" and "Nalla Manithar" from S. Gandhi Durai's collection *Puthu Vaazhkai*, this paper analyzes the humanistic thought reflected in them. The act of Thunikkara Sami, who identified a child's basic needs—food, clothing, and shelter—to help them pursue an education and lovingly provided them, is described as the pinnacle of humanity. Similarly, through an unknown man who helped a helpless mother and daughter, it is highlighted that humanity remains alive today in some corner of the world. By comparing quotes from Thiruvalluvar, Thayumanavar, Vallalar, and poet Pratap, this article establishes that S. Gandhi Durai's short stories emphasize the virtues of compassion, love, and gratitude in human life. The conclusion of this study is that these short stories instill confidence that humanity has not completely perished in a mechanized life.

**Keywords:** Child's education; The seed that became a banyan tree; City of humanism; Humanism; Su. Kanthi Durai's short stories

### ஆய்வுச்சுருக்கம்

மனிதநேயம் என்பது மனிதம் என்ற இயல்பான அடிப்படைப் பண்பிலிருந்து தோன்றுவதாகும். பிறருக்கு உதவும்போது எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் செயல்படுவதே மனிதநேயத்தின் இலக்கணம் என வள்ளுவம், தொல்காப்பியம், சித்தர் பாடல்கள் முதலிய தமிழ் மரபு நூல்கள் சான்று பகர்கின்றன. இருபத்தோராம் நூற்றாண்டில் இயந்திரமயமான வாழ்க்கை முறையால் மனிதநேயப் பண்புகள் மங்கிவரும் சூழலில், நவீன தமிழ்ச் சிறுகதை இலக்கியங்கள் அப்பண்பை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன. இக்கட்டுரை சு. காந்தி துரையின் 'புதுவாழ்க்கை' தொகுப்பிலுள்ள 'துணிக்கார சாமி', 'நல்ல மனிதர்' ஆகிய சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் வெளிப்படும் மனிதநேயச் சிந்தனைகளை ஆய்வு செய்கிறது. குழந்தைக்குக் கல்வி கற்பதற்கு உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு அவற்றை அன்புடன் வழங்கிய துணிக்கார சாமியின் செயல் மனிதநேயத்தின் உச்சமாக விளக்கப்படுகிறது. அதேபோன்று, ஆதரவற்ற ஒரு தாய்க்கும் மகளுக்கும் உதவிய அறியாத மனிதர் மூலம் மனிதநேயம் இன்றும் ஒரு மூலையில் உயிர்ப்புடன் இருப்பது எடுத்துக்காட்டப்படுகிறது. வள்ளுவம், தாயுமானவர், வள்ளலார், கவிஞர் பிரதாப் ஆகியோரின் மேற்கோள்களை ஒப்பிட்டு, சு. காந்தி துரையின் சிறுகதைகள் மனித வாழ்வில் இரக்கம், அன்பு, நன்றியுணர்வு ஆகிய பண்புகளை வலியுறுத்துவதை இக்கட்டுரை நிறுவுகிறது. இயந்திரமய வாழ்வில் மனிதநேயம் முழுமையாக அழிந்துவிடவில்லை என்ற நம்பிக்கையையும் இச்சிறுகதைகள் ஏற்படுத்துகின்றன என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

**முக்கியச் சொற்கள்:** குழந்தையின் கல்வி; ஆலமரமான விதை; மனிதநேய நகர்; மனிதநேயம்; சு. காந்தி துரை சிறுகதைகள்

## 1. முன்னுரை

மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்த மனிதநேயம் என்ற ஒன்று மட்டுமே பற்றுக்கோடாக அமைகிறது. ஏனெனில் மனிதநேயம் இல்லாத மனிதன் உலகில் வாழ்ந்தாலும் மரத்திற்கு ஒப்பானவராகக் கருதப்படுகிறார் என்கிறார் வள்ளுவர். பிறருக்கு உதவி செய்வதை மட்டும் மனிதநேயம் என்று கூற முடியாது; யார் என்று

தெரியாமல், எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்வதே மனிதநேயம் ஆகும். இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நாம் இயந்திரமாக வாழ்வதோடு மட்டுமல்லாமல், இரக்கம், அன்பு, மனிதாபிமானம் என்ற மனிதப் பண்பு ஏதுமற்ற கொடூரமான விலங்குகளைப் போல வாழ்ந்து வருகிறோம். பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை இல்லாமல் பிறர் கஷ்டத்தைப் பார்த்தும் பாராமல் போகும் நிலைதான் இன்று அதிகமாக உள்ளது. கால மாற்றத்தில் மக்கள் மனிதப் பண்பு அற்ற ஒரு வாழ்வை வாழ்கின்றனர். பிறருக்கு உதவி செய்யும் பண்பைப் புத்தகத்தில் மட்டுமே காண முடிகிறது. மக்களுக்கு நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் பல்வேறு ஊடகங்களில் சிறுகதை என்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. அரைப் பக்கக் கதை, ஒரு பக்கக் கதை என்று பல பரிமாணங்களில் சிறுகதைகள் மூலம் எழுத்தாளர்கள் நற்பண்புகளை வலியுறுத்த முனைகின்றனர். இன்றைய எழுத்தாளர்களில் சு. காந்தி துரையும் ஒருவர். அவரது சிறுகதைகளில் வெளிப்படும் மனிதநேயச் சிந்தனையை மக்களுக்கு எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## 2. மனிதநேயம் – இலக்கணமும் விளக்கமும்

செயற்கரிய செயலைச் செய்வதே இப்பிறவியில் செய்யவேண்டிய மிக முக்கியச் செயலாகும். அதற்கு இன்றியமையாததாகக் கருதப்படுவது மனிதநேயமாகும்.

*“எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்” (சித்தர்கணம், பாடல் 4)*

என்கிறார் தாயுமானவர். தமக்கென வாழாமல் பிறருக்கென வாழும் அன்புள்ளங்களில் சுரப்பதுதான் மனிதநேயம்.

*“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு”*

*(திருக்குறள், 80)*

என்று வள்ளுவர் எடுத்துக் கூறும் விதத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மனம் என்பது விலங்கிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டும் ஆறாவது அறிவு எனப்படும் பகுத்தறிவாகும். அத்தகைய அறிவு நன்மை தீமையைக் கண்டறிந்து செயல்படுவதாகும்.

*“ஆறறிவதுவே அவற்றொடு மனனே” (தொல்காப்பியம், மரபியல், 27)*

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம் எல்லாப் புகழும் தரும். மனம் என்ற சொல்லின் அடியாகவே மனிதன் என்ற சொல்லும் தோன்றியிருக்க வேண்டும். மனத்தை உடையவன் ‘மனத்தன்’ என்பதிலிருந்து பின்பு ‘மனிதன்’ என்றாகி, அதுவே நீண்டு ‘மானிடம்’ என்றும் ஆகியிருக்க வேண்டும் (தமிழர் கண்ட மனம், ப. 6). மனிதன் என்னும் சொல் முதன்முதலாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இனியவை நாற்பதில் காணப்படுகிறது:

*“நில்லாத காட்சி நிறையில் மனிதரைப் புல்லா விடுதல் இனிது” (இனியவை நாற்பது, 26)*

மனிதநேயத்தின் இலக்கணமாவது யாதெனின், ‘பிறரது துன்பத்தில்தான் துன்புறுவதும், பிறரது இன்பத்தில்தான் இன்புறுவதும் மனிதநேயத்தின் இலக்கணம்’ (இது உங்கள் யுகம், ப. 192) என்று கூறப்படுகிறது. ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்கிறார் வள்ளலார். ‘பிறர் துயரை மறந்தவர்கள் பிறந்து என்ன லாபம்? பிணியெனவே மனிதகுலம் முழுமைக்குமோர் சாபம்’ என்று கவிஞர் பிரதாப் குறிப்பிடுகிறார் (கவிதைச் சிறகுகள், ப. 167). இவ்வார்த்தைகள் மூலம் மனிதநேயம் என்பது எல்லா உயிர்களிடமும் கட்டாயம் இருக்க வேண்டிய பண்பு என்பது புலனாகிறது. சு. காந்தி துரையின் சிறுகதைகளில் இப்பண்பு எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை அறிந்துகொள்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## 3. குழந்தையின் கல்வி

‘எழுத்தறிவித்தவன் இறைவன்’ என்ற வாக்கிற்கு ஏற்ப எழுத்தை அறிமுகம் செய்து வாழ்க்கைக்குக் கல்வி எனும் ஒளியேற்றும் ஆசான் இறைவன் எனப் பெரியோர் கூறினாலும், அக்கல்வியைக் கற்பதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவன உணவு, உடை, உறையுள் என்னும் மூன்றும் ஆகும். உணவு, உறைவிடத்தை விட ஒரு மனிதனை மனிதனாக மதிக்கச் செய்வது ஆடையாகும். ‘ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்’ என்ற சொல்லாட்சி மூலம் ஆடையின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகிறது. மனிதனை முழுமையாக்கும் ஆடையை மனிதநேயத்துடன் கொடுத்துக் கல்வியறிவு பெறச் செய்து வாழ்வில் வெற்றி பெற உதவிய உயர்ந்த உள்ளத்தை

நன்றியுணர்வுடன் நினைவுகூரும் ஒரு மாணவனின் மனநிலையை எடுத்துக் கூறும் வகையில் அமைந்த இச்சிறுகதை மனிதநேயத்தின் உச்சம் எனலாம். மனிதநேயம் இன்றைய காலகட்டத்தில் மறந்துபோன ஒன்றாகத் தோன்றினாலும், அது எங்கோ ஓர் மூலையில் வாழ்ந்துகொண்டே இருக்கிறது. பெண்கள் பல இடங்களில் கடினமான சூழ்நிலையில் அவதிப்படும்போது தந்தையாகவும் கடவுளாகவும் உதவும் மனிதநேயத்தை 'மனிதக் கடவுள்' எனவே கூறவேண்டும். மனிதம் மறந்தபோதும் உலகத்தை உயிர்ப்பிக்கும் மனிதநேயம் ஏதோ ஒரு மூலையில் வாழ்ந்துகொண்டிருப்பதை ஆசிரியர் இச்சிறுகதையில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

## 4. ஆலமரமான விதை

மதுரை மாநகரில் நெல் மூட்டை நாற்பது ரூபாய்க்கு விற்ற காலத்திலேயே, பெரிய துணிக்கடையில் விற்பதைவிடக் குறைந்த விலையில் துணி தரும் ஒரே மனிதர் துணிக்காரர்தான் என்ற நம்பிக்கையை ஊர் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தார்:

*"யாரும் ரொக்கம் கொடுத்து வாங்கியது கிடையாது; எல்லோரும் கடன்தான்! அவர் நோட்டில் பற்று வைக்காதவர் யாரும் இருக்க முடியாது" (புதுவாழ்க்கை: துணிக்கார சாமி, ப. 56)*

சுற்றுப்பட்டியில் உள்ள நாற்பது கிராம மக்களும் அவருடைய கணக்கு நோட்டில் இருப்பர். பெயர் தெரியாதவர்கள் கூட 'துணிக்காரர்' என்றால் அறிவர். இறந்துபோனவர்களின் கணக்கு நேர்செய்யப்படும். குழந்தைகளுக்கு அவர் வருகை மகிழ்ச்சி தரும். அம்மாவிடம் அடிவாங்கி அழுத ராஜேந்திரனை அவ்வாறு கண்ட துணிக்காரர் யார் என வினவ, சோலமலை இராமுத்தாயின் மகன் ராஜேந்திரன் மூன்றாம் வகுப்பு படிப்பதாகக் கூறி அழுகையைத் துடைத்தான். வீட்டிற்குச் சென்ற துணிக்காரரை வரவேற்ற இராமுத்தாய், தண்ணீர் கொடுக்கக் கேட்டுக் குடித்துவிட்டு, குழந்தையை ஏன் அடித்தாய் எனக் கேட்டு, அவனுக்குப் பிடித்த காற்சட்டையையும் ஒரு செட் யூனிபார்மையும் எடுத்துக் கொடுத்தார்:

*"டேய் இராஜேந்திரா, படித்துப் பெரியவனாக வந்து தாத்தாவுக்குக் கடனை அடை போ... படிக்கும் பையனுக்குப் பத்தாம் வகுப்பு வரை யூனிபார்ம், காற்சட்டை, சட்டை யாருக்கும் தெரியாமல் உனக்குத் தருகிறேன்" (புதுவாழ்க்கை: துணிக்கார சாமி, ப. 62)*

என்று கொடுத்த வாக்கைக் காப்பாற்றினார். ராஜேந்திரனும் நன்கு படித்து நல்ல வேலை பெற்று, அம்பாசிடர் காரில் அவரிடம் வந்து 'என்னை ஆசீர்வதியுங்கள்' என்று காலில் விழுந்து நன்றிக்கடனைச் செலுத்த வந்தான். அதைக் கேட்ட துணிக்காரர்:

*"எத்தனையோ விதை போட்டேன், நான் மறந்துவிட்டேன்; ஆனால் ஆலமரமாக வந்து பேர் சொல்லிட்டான்" (புதுவாழ்க்கை: துணிக்கார சாமி, ப. 53)*

என்றார். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவம் கூறும் வாக்கிற்கு ஏற்ப, உதவிசெய்த உள்ளத்தை மறவாமல் நினைவில்கொண்டு, நேரில் கண்டு ஆசி பெற்று நன்றிக்கடனைக் கண்ணீருடன் செலுத்த வந்த ராஜேந்திரனைக் கண்டு, 'அய்யா, சின்ன மனுஷன் கடன் அடைக்க வந்திருக்கிறானாக்கும்' (புதுவாழ்க்கை: துணிக்கார சாமி, ப. 53) என்று துணிக்காரர் கூறும் வார்த்தையின் மூலம், செய்நன்றி மறவாத பண்பு வெளிப்படுகிறது. மனிதன் தற்போது இயந்திரமாக வாழும் சூழ்நிலையில், மனிதாபிமானத்தை வெளிக்காட்டும் சிறுகதைகளுள் இது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## 5. மனிதநேய நகர்

பெண்கள் பலநேரங்களில் தாம் சரியான முடிவெடுப்பதாக எண்ணிக் காதல் எனும் வலையில் விழுந்து, காதலனை நம்பிப் பெற்றோரை விட்டு வருவதும், பின் காதலன் ஏமாற்றிச் சென்றுவிடுவதும், சிலர் தவறான பாதையில் சென்று விபச்சாரிகளாக மாறுவதும் நிகழ்கின்றன. கல்வி இல்லாமல் வாழவழி தெரியாமல் சில பெண்கள் சீரழிகின்றனர். அவ்வாறே காதலனை நம்பிச் சென்ற ஒரு பெண், தன் மகளுடன் ஊருக்குச் செல்ல வழியின்றி ஓர் ஊரில் வீடுவீடாகப் பிச்சை கேட்கிறாள். இரு வீதிகளிலும் யாரும் கதவைத் திறந்து உதவவில்லை. மகளின் பசிக்காக, 'வீடுவீடாக மீண்டும் கேட்க ஆரம்பித்தேன்: அம்மா… அய்யா… அய்யா… எனக்கே வெட்கம் புடுங்கித் தின்றது. இந்தப் பிழைப்புக்கு ஒரு முழம் கயிறு போட்டு அன்றைக்கே தொங்கியிருக்க வேண்டும்; மனமில்லை, மகளை விட்டு மரணிக்க மனமில்லை' (புதுவாழ்க்கை: நல்ல மனிதர், ப. 97) என்று அவள் நினைக்கிறாள். ஆயினும் மகளுக்காக அடுத்த வீட்டை நோக்கி நடந்தாள். அங்கு கடுகடுத்த தோற்றமுடைய ஒருவர் வந்து, தண்ணீரும் உதவியும் கேட்ட அவளிடம் தண்ணீர் கொண்டுவந்து

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 04 ·September 2026
[https://www.tamilmanam.in]

கொடுத்துவிட்டு, 'ஏம்மா, நீ பிச்சைக்காரி மாதிரி தெரியலையே, எந்த ஊர்?' (புதுவாழ்க்கை: நல்ல மனிதர், ப. 98) எனக் கேட்டார். அவ்வார்த்தை கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. தண்ணீர் அருந்திவிட்டு, தான் நத்தம் அருகிலுள்ள கோபால்பட்டிக்கு அடுத்த ஊரான புதூரைச் சேர்ந்தவள் எனக் கூற, நூறு ரூபாய் போதுமா எனக் கேட்ட அவர், வீட்டின் முன்னிருந்த மின்பெட்டியைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுகள் பத்தை எடுத்து அவள் கையில் திணித்து, 'எடுத்துக்கோ, வேகமாக ஊர் பக்கம் போய்ச் சேர்றதைப் பார்' (புதுவாழ்க்கை: நல்ல மனிதர், ப. 99) என்றார். இவ்வார்த்தை கேட்டவுடன் தன் தந்தை கூறிய, 'நல்லாப் படிச்சு முன்னேற வழியில்லாட்டி ஆடு மாடு மேய்த்துப் பிழைக்கிறது; எங்களோடு போகட்டும்' என்ற வார்த்தை நினைவுக்கு வந்தது. 'கடவுள் கோயிலில் இல்லை... இவரைப் போன்ற மனிதர்களில்தான் இருக்கிறார்' என மனதில் எண்ணிக்கொண்டு, தம்பி தன்னைச் சேர்த்துக்கொள்வானா என்ற ஐயம் இருந்தபோதும், கூலி வேலை பார்த்தேனும் மகளை வளர்க்க வேண்டும் என்ற உறுதியுடன் ஊர் நோக்கி வேகமாக நடந்தாள். மனிதன் என்னும் போர்வையில் தன்னை ஏமாற்றியவன் வாழும் அதே நாட்டில், இதுபோன்ற நல்ல மனிதர்கள் காரணமாக மனிதநேயம் மாண்டுபோகாமல் இன்றும் உயிர்ப்புடன் இருப்பதை ஆசிரியர் இச்சிறுகதையில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

## 6. முடிவுரை

செயற்கை நுண்ணறிவு மக்களை ஆட்சி செய்யும் இன்றைய காலகட்டத்தில், மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு கூட இல்லாத நிலைக்கு மாறிப்போயுள்ளது. மனித உயிர்களை ஒரு பொருளாகக் கூட மதிக்காத மக்கள் மனநிலையை அனைவரிடமும் காணமுடிகிறது. பிறருக்கு உதவிசெய்தல் புத்தகங்களில் எழுத்தாக மட்டுமே காணப்படும் நிலை உருவாகியுள்ளது. மக்கள் மனத்தில் இரக்கம், அன்பு என்ற குணங்கள் மருந்துக்குக் கூட இல்லாத நிலையிலும், இந்நிலை மாற வேண்டும் என்பதற்காக இன்றைய எழுத்தாளர்கள் மனிதநேயம் என்னும் பண்பை வெளிப்படுத்தும் சில நிகழ்வுகள் மூலம் அதனை எடுத்துரைக்கின்றனர். மக்களிடம் இத்தகைய பண்பு வேண்டும் என அவர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 04 ·September 2026
[https://www.tamilmanam.in]

*"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்"*

*(திருக்குறள், 997)*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, அன்பு இல்லாதவர் மரத்திற்கு ஒப்பானவர் என்பதைச் சு. காந்தி துரை தம் சிறுகதைகள் மூலம் தெளிவாக எடுத்துரைத்துள்ளமை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது. 'துணிக்கார சாமி' மற்றும் 'நல்ல மனிதர்' ஆகிய சிறுகதைகள், மனிதநேயம் இன்றும் அழியாமல் சமூகத்தின் மூலைமுடுக்குகளில் உயிர்ப்புடன் வாழ்ந்துகொண்டிருப்பதை நமக்கு உணர்த்துகின்றன.

## Declarations

### Author Contributions

| Author | CRediT role(s) |
|---|---|
| மு. சுமதி | கருத்தாக்கம்; ஆய்வு முறை; கட்டுரை வரைவு (Conceptualization; Methodology; Writing – original draft) |
| முனைவர் மு. கலாமாரி | வழிகாட்டுதல்; மேற்பார்வை; கட்டுரை திருத்தம் (Supervision; Review & Editing) |

### Funding

இந்த ஆய்வுக்கு பொது, தனியார் அல்லது இலாப நோக்கற்ற எந்த நிறுவனத்திடமிருந்தும் குறிப்பிட்ட மானியம் எதுவும் பெறப்படவில்லை.

### Conflict of Interest

ஆசிரியர்கள் இக்கட்டுரையில் எவ்வித நலன் முரண்பாடும் இல்லை என அறிவிக்கின்றனர்.

### Ethics Approval and Consent

இவ்வாய்வு இலக்கிய பகுப்பாய்வாக அமைந்திருப்பதால், மனிதப் பங்கேற்பாளர்கள் தொடர்பான நெறிமுறை ஒப்புதல் இதற்குப் பொருந்தாது.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 04 ·September 2026
[https://www.tamilmanam.in]

## Data Availability Statement

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட முதன்மை மூலமான சு. காந்தி துரையின் ‘புதுவாழ்க்கை’ (சித்ரா பதிப்பகம், 2020) தொகுப்பு பொது வெளியீடாகக் கிடைக்கிறது; பிற மேற்கோள் நூல்கள் இக்கட்டுரையின் துணை நூற்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## Use of Generative AI and AI-Assisted Tools

கட்டுரையின் அறிவுசார் உள்ளடக்கம், ஆய்வு நோக்கு மற்றும் முடிவுகள் ஆசிரியர்களால் முழுமையாக உருவாக்கப்பட்டவை. கட்டுரையை இந்த இதழின் வடிவமைப்புக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தும் பணியில் மட்டும் AI கருவி (Claude, Anthropic) பயன்படுத்தப்பட்டது; உள்ளடக்கத்திற்கான முழுப் பொறுப்பும் ஆசிரியர்களையே சாரும்.

## Acknowledgements

ஆய்வுக்கு ஆதரவளித்த ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம், தமிழ்த்துறை ஆய்வு மையத்திற்கு ஆசிரியர்கள் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.

## Copyright and Licence

© 2026 The Author(s). This article is published in TAMILIYAL under the Creative Commons Attribution 4.0 International Licence (CC BY 4.0), which permits use, sharing, adaptation, distribution and reproduction in any medium or format, provided appropriate credit is given to the original author(s) and the source, a link to the licence is provided, and any changes are indicated. Licence: https://creativecommons.org/licenses/by/4.0/

## Publisher’s Note

TAMILIYAL remains neutral with regard to jurisdictional claims in published maps and institutional affiliations. The views expressed are those of the authors.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 04 ·September 2026
[https://www.tamilmanam.in]

## References

[1.] திருக்குறள் தெளிவுரை. *டான் பதிப்பகம்*, திருநெல்வேலி.

[2.] காந்தி துரை, சு. *புதுவாழ்க்கை*. சித்ரா பதிப்பகம், 2020.

[3.] சுப்பிரமணியன், ச. வே. *தொல்காப்பியம் தெளிவுரை*. மெய்யப்பன் பதிப்பகம், 1998.

[4.] தாயுமானவர். *சித்தர் கணம் (தாயுமான அடிகள் திருப்பாடல்கள்)*. 2வது பதிப்பு, கழக வெளியீடு, 1974.

[5.] நாகராஜன், கரு. *தமிழர் கண்ட மனம்*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1998.

[6.] பிரதாப். *இது உங்கள் யுகம்*. [பதிப்பகம் மற்றும் ஆண்டு குறிப்பிடப்படவில்லை].

[7.] பிரதாப். *கவிதைச் சிறகுகள்*. [பதிப்பகம் மற்றும் ஆண்டு குறிப்பிடப்படவில்லை].

[8.] மோகன், இரா. *இனியவை நாற்பது*. வானதி பதிப்பகம், 2017.